சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.8/2016

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 08.07.2022 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : செந்தில்குமார் | | கிராமம் | : |
| த/பெ : மாரிமுத்து | | வட்டம் | : |
| மதம் : | | தொழில் | : |
| ஜாதி : | | வயது | : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) ஆதார் அடையாள அட்டை நகல் - மசா.ஆ.3 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

2) வாகனப் பதிவுச் சான்றிதழ் நகல் - ம.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

நான் வருமான வரி செலுத்தவில்லை. நான் லாரி வைத்து தொழில் செய்வதற்கு வரவு செலவு கணக்கு பராமரிக்கவில்லை. சாலை விபத்தில் இறந்துபோன காத்தமுத்து என்னிடம் வேலைப்பார்த்தார் என்பதற்கும் மாத சம்பளமாக ரூ.9000 அவருக்கு கொடுத்தேன் என்பதற்கும், ஓட்டுநர் படியாக மாதம் ரூ.6000 கொடுத்தேன் என்பதற்கும் எழுத்துப்பூர்வமான ஆதாராம் என்னிடம் இல்லை. இறந்துபோன காத்தமுத்து எந்த தேதியில் என்னிடம் வேலைக்கு சேர்ந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை அதற்கும் எழுத்துப்பூர்வமான ஆதாரம் என்னிடம் இல்லை. காத்தமுத்து வீட்டு கதவு எண் எனக்கு தெரியாது. காத்தமுத்து எந்த காலத்திலும் என்னிடம் லாரி ஓட்டுநராக வேலைப்பார்த்தது இல்லை என்றால்சரியல்ல. காத்தமுத்து 22.07.2015 ல் இறந்துபோனார். எனக்கு சொந்தமாக உள்ள லாரி எந்த தேதியில் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. காத்தமுதது குடும்பத்திற்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்தற்காக அவர் என்னிடம் ஓட்டுநராக வேலைப்பார்த்தாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. காத்தமுதது என்னிடம் வேலைப்பார்த்தது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியும். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் வந்து

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

ஒம்/செந்தில்குமார்

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.07.11 11:36:20 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.